**<u>சிறப்பு சார்பு நீதிமன்றம், (மோட்டார் வாகன விபத்து இழப்பீடு தீர்ப்பாயம்)</u>**

**<u>திருப்பத்தூர், திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>MCOP . No.99/2023</u>**

**<u>நாள் : 20.11.2025</u>**

**ம.சா.** 1 (மனுதாரர் தரப்பில்) வது நபரின் வாக்குமூலம் (1959)–ம் ஆண்டின் 54 வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.தேன்மொழி | மாவட்டம் | : | கிருஷ்ணகிரி |
| கணவர் பெயர் | : | திரு.ஜெயசீலன் | வயது | : | 36 |
| ஊர் | : | வேளாவள்ளி | தொழில் | : | டெய்லர் |
| வட்டம் | : | போச்சம்பள்ளி | தேசியம் | : | இந்தியன் |

நான் இந்த வழக்கில் மனுதாரர் ஆவேன். இந்த வழக்கிற்கான நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டவை மற்றும் உண்மையானவை. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

1. விபத்து சம்பந்தமாக ஊத்தங்கரை காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை நகல் – ம.சா.ஆ.1

2. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனை வழங்கிய டிச்சார்ஜ் சம்மரி நகல் – ம.சா.ஆ.2

3. விபத்து ஏற்படுத்திய காரின் காப்பீட்டு பாலிசி நகல் – ம.சா.ஆ.3

4. விபத்து ஏற்படுத்திய காரின் பதிவு புத்தகம் நகல் – ம.சா.ஆ.4

5. விபத்து ஏற்படுத்திய கார் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் நகல் –ம.சா.ஆ.5

6. விபத்து ஏற்படுத்திய காரின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை நகல் – ம.சா.ஆ.6

7. கிருஷ்ணகிரி அரசு மருத்துகல்லூரி மருத்துவமனையில் வழங்கிய சி.டி. ஸ்கேன் எடுத்ததற்கான செலவு ரசீது அசல் (ரூ.500) – ம.சா.ஆ.7

8. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது வழங்கிய மருத்துவ செலவு ரசீது (ரூ.42,900) அசல் – ம.சா.ஆ.8

9. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது மருந்துகள் வாங்கியதற்கான செலவு ரசீது (ரூ.7,525) அசல் – ம.சா.ஆ.9

10. கிருஷ்ணகிரி லைப் கேர் தனியார் மருத்துவமனையில் உள் நோயாளியாக சிகிச்சை பெற்றபோது வழங்கிய மருத்துவ செலவு ரசீது (ரூ.20,071) அசல்– ம.சா.ஆ.10

11. ஊத்தங்கரை அரசு மருத்துவமனையின் விபத்து பதிவேடு இணைய நகல் – ம.சா.ஆ.11

12. ஊத்தங்கரை காவல் நிலையத்தாரால் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை இணைய நகல் – ம.சா.ஆ.12

13. ஊத்தங்கரை அரசு மருத்துவமனையின் காயச்சான்று இணைய நகல் – ம.சா.ஆ.13

14. ம.சா.1ன் ஆதார் அடையாள அட்டை நகல் – ம.சா.ஆ.14

15. ம.சா.1ன் வங்கி கணக்கு புத்தகம் நகல் – ம.சா.ஆ.15

மனுவில் கோரியபடி தீர்ப்பாக கோருகிறேன்.

**2ஆம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் டெய்லர் வேலை செய்து வருகிறேன். விபத்து நடந்த சமயத்தில் நான் திருப்பூரில் உள்ள பனியன் கம்பெனியில் டெய்லர் வேலை பார்த்தேன். தற்போது எந்த வேலைக்கும் போவதில்லை. நான் டெய்லர் வேலை செய்து மாதம் ரூ.25,000/– சம்பாதித்தை காட்டும் ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொல்வதுபோல் திருப்பூரில் எந்த வேலையும் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காகவேண்டி திருப்பூரில் வேலை செய்ததாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான்

சம்பவத்தன்று வேளாவள்ளியில் உள்ள எனது வீட்டிலிருந்து எனது அம்மா வீட்டிற்கு போனேன். எனது அம்மாவின் வீடு நல்லாகவுண்டர் ரோட்டில் உள்ளது. விபத்தானது காரப்பட்டு பைபாஸ் அருகே நடந்தது. நான் விபத்து சமயத்தில் TN 83 X 5031 என்ற ஆக்டிவா வாகனத்தில் பயணித்தேன் என்றால் சரிதான். என்னுடன் வயதான என்னுடைய பாட்டி பின்னால் அமர்ந்து பயணித்தார் என்றால் சரிதான். எனக்கு பின்னால்தான் கார் வந்தது என்றால் சரிதான். காரப்பட்டு கூட்ரோடு அருகே நான் சிக்னல் காட்டாமல் திரும்பியதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. நான் பயணித்த இருசக்கர வாகனத்தின் பதிவுச்சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய ஓட்டுநர் உரிமைத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. அந்த ஓட்டுநர் உரிமம் தொலைந்துவிட்டது. கிருஷ்ணகிரி ஆர் டி ஓ அலுவலகத்தில்தான் எனக்கு ஓட்டுநர் உரிமம் வழங்கினார்கள். 2022ல் ஓட்டுநர் உரிமம் பெற்றேன். அவ்வாறு ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கு ஆதார் அடையாள அட்டை உள்ளிட்ட ஆவணங்களை வழங்கியிருந்தேன், எனக்கு அந்த அளவுக்கு படிப்பறிவில்லை, என் கணவர்தான் விண்ணப்பித்தார். நான் சொல்வதுபோல் எனக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் சரியல்ல. அவ்வாறு ஓட்டுநர் உரிமம் இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. ஓட்டுநர் உரிமம் தொலைந்த தேதி ஞாபகமில்லை. அவ்வாறு ஓட்டுநர் உரிமம் தொலைந்ததற்கு பின்னிட்டு அதன் நகல் கேட்டு சம்பந்தப்பட்ட ஆர் டி ஓ அலுவலகத்தை அணுகினேனா என்றால் இல்லை. ஒரு வாகனத்தை இயக்கும்போது ஓட்டுநர் உரிமமின்றி இயக்கக்கூடாது என்றால் சரிதான். எனக்கு வாகனம் ஓட்டத் தெரியாத நிலையில் வயதான பாட்டியை பின்னால் உட்கார வைத்துக்கொண்டு பேலன்ஸ் கிடைக்காமல் விபத்தை ஏற்படுத்திக்கொண்டேன் என்றால் சரியல்ல. ம.சா.ஆ.6 காரின் மோட்டார் வாகன ஆய்வறிக்கையில் அதன் தகுதிச்சான்றானது 11.05.2023ஆம்

தேதியிலேயே காலாவதியாகிவிட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தில் எனது வலது கால் முட்டிக்கு கீழ் எலும்பு முறிவு ஏற்பட்டது, அத்துடன் தலையிலும் காயம் ஏற்பட்டது. விபத்திற்கு பின்னிட்டு ஊத்தங்கரை அரசு மருத்துவமனைக்கு சென்றேன். அதற்கு பின்னிட்டு கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். எனக்கு வலி அதிகமாக இருந்ததால் லைப் கேர் என்ற தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தேன். நான் தாக்கல் செய்துள்ள மருத்துவ பில்கள் சம்பந்தமாக கலைஞர் காப்பீட்டு திட்டத்தின்கீழ் தொகை பெற்றேனா என்றால் இல்லை. நான் ஊட்டச்சத்துக்காக செலவிட்டதாக சொல்லப்படும் தொகையான மிகைப்படுத்தி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதிக நஷ்ட ஈடு பெறும் நோக்கில் மனுவில் சங்கதிகளை மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஓட்டுநர் உரிமமின்றி வாகனத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக்கொண்டதால் 2ஆம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால் சரியல்ல. விபத்திற்கு என்னுடைய அதிவேகமும், அஜாக்கிரதையும்தான் காரணம் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** – இல்லை

ஒம்/. J. நாகலட்சுமி @ விஜயராணி,
சிறப்பு சார்பு நீதிபதி (MACT),
திருப்பத்தூர்.